# மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகள்




கைகளை அடிக்கடி சோப்பு அல்லது ஆல்கஹால் உள்ள கிருமி நாசினியால் கழுவி சுத்தப்படுத்தவும்



தேவையான மற்றும் நன்கு அறிமுகமான அதே படகில் பணிபுரியும் மீனவர்களை மட்டும் மீன்பிடித் தொழிலில் அனுமதிக்கவும். முன்பின் தெரியாத நபர்களை அனுமதிக்க வேண்டாம்.



தனிநபர் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கவும். பாதுகாப்பற்ற முறையில் இருமுவது மற்றும் தும்முவதை தவிர்க்கவும்



மீன்பிடி உபகரணங்களை கிருமி நாசினி கொண்டு சுத்தப்படுத்தவும்



சமூக இடைவெளியைக் கடைபிடிக்கவும்.
கூட்டம் சேர்வதைத் தவிர்க்கவும்.

**தனித்திருங்கள் | விழித்திருங்கள் | சமூக அக்கறையுடன் இருங்கள்**

**வரும் முன் காப்போம்**

**ICAR - மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம்**
**கொச்சி, கேரளா - 682029**

# மீன்பிடித் துறைமுகங்களில் கொரோனா வைரசைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்


அனுமதியில்லாத மற்றும் அந்நிய நபர்கள் மீன்பிடித் துறைமுகத்தில் நுழைவதைக் கட்டுப்படுத்தவும்



கூட்டம் சேர்வதைத் தவிர்க்கவும்




மீன்பிடித் துறைமுகப் பணியாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுக்குள் வைக்கவும்




சமூக இடைவெளி மற்றும் தனி நபர் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்கவும்




வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யவும்.
முகக்கவசம் மற்றும் கையுறைகளைப் பயன்படுத்தவும்.






| தனித்திருங்கள் | விழித்திருங்கள் | சமூக அக்கறையுடன் இருங்கள் |
|---|---|---|

**வரும் முன் காப்போம்**

**ICAR - மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம்**
**கொச்சி, கேரளா - 682029**

# கோவிட்-19: மீன் சந்தையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான ஆலோசனைகள்

கோவிட்-19 சுவாச நீர்த்துளிகள் மூலம் பரவுகிறது



நோயுற்ற நபர் இருமும் போதும், தும்மும் போதும் அல்லது சுவாசத்தை வெளியேற்றும் போதும் வைரஸ் நிறைந்த சுவாச நீர்த்துளிகளை வெளியேற்றுகிறார்

61-71% ஆல்கஹால் அல்லது 0.5 % ஹைட்ரஜன் பெராக்ஸைடு அல்லது 0.1 % சோடியம் ஹைப்போ குளோரைட் கொண்டு மேற்பரப்புகளை கிருமி நீக்கம் செய்வதன் மூலம் கொரோனா வைரஸை செயலிழக்கச் செய்ய முடியும்

தொடுகையில்லா பரிசோதனை செய்யவும்

நுழைவாயிலில் வெப்ப நிலையைப் பரிசோதிக்கவும்



கையுறை மற்றும் முகக்கவசம் பயன்படுத்தி சுகாதாரத்தை பேணிக் காக்கவும்

கைகளைச் சோப்பு அல்லது ஆல்கஹால் கலந்த கிருமிநாசினி கொண்டு கழுவவும்



சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்

விற்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையே 1மீ (3 அடிகள்) இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்



குடும்பத்தில் ஒரு உறுப்பினர் மட்டும் மீன் வாங்குவதற்கு செல்லவும்



வளாகம், வாகனங்கள் மற்றும் சுற்றுப்புறத்தில் கிருமிநாசினி தெளிக்கவும்



கூட்டம் சேர்வதைத் தவிர்க்கவும்

அந்நிய நபர்கள் நுழைவதை கட்டுப்படுத்தவும்



விற்பனை நேரத்தை, அரசு அறிவுறுத்தலின்படி கட்டுப்படுத்தவும்


தும்மல், இருமல் மற்றும் காய்ச்சல் அறிகுறிகள் உள்ளவர்களை அனுமதிக்க வேண்டாம்

பாதுகாப்பாக விற்போம் | பாதுகாப்பாக வாங்குவோம் | பாதுகாப்பாக உண்போம்

ICAR - மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம், கொச்சி, இந்தியா

# கோவிட் 19: மீனவர்களுக்கு கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான ஆலோசனைகள்

**கோவிட்- 19 சுவாச நீர்த்துளிகள் மூலம் பரவுகிறது**



நோயுற்ற நபர் இருமும் போதும், தும்மும் போதும் அல்லது சுவாசத்தை வெளியேற்றும் போதும் வைரஸ் நிறைந்த சுவாச நீர்த்துளிகளை வெளியேற்றுகிறார்.

61-71% ஆல்கஹால் அல்லது 0.5 % ஹைட்ரஜன் பெராக்ஸைடு அல்லது 0.1 % சோடியம் ஹைப்போ குளோரைட் கொண்டு மேற்பரப்புகளை கிருமி நீக்கம் செய்வதன் மூலம் கொரோனா வைரஸை செயலிழக்கச் செய்ய முடியும்

.

## கைகளின் சுகாதாரம் அவசியம்

மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் அடிக்கடி கைகளை சோப்பு அல்லது ஆல்கஹால் உள்ள கிருமி நாசினியால் கழுவி சுத்தப்படுத்தவும்



## ஆட்கள் குறைவாக தேவைப்படும் மீன் பிடிப்பு முறையை மேற்கொள்ளவும்



புகைப் பிடித்தல், புகையிலைப் போடுதல், பாக்கு போன்ற வஸ்துக்களை மெல்லுதல் மற்றும் எச்சில் துப்புவதைத் தவிர்க்கவும்

## தனிநபர் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்கவும்

சுத்தமான, பாதுகாப்பான உடைகள், முகக்கவசம், தலை மற்றும் கையுறைகளை அணியவும்.

மீன்கள் மற்றும் ஐஸ்கட்டிகளின் மீது இருமுவதோ, தும்முவதோ, எச்சில் துப்புவதோ கூடாது





மீன்பிடி படகின் தளம் மற்றும் உபகரணங்களை சலவைத்தூள் அல்லது கிருமிநாசினி கொண்டுக் கழுவி சுத்தம் செய்யவும்


**மீன்பிடிக்க செல்பவர்களின் உடல் வெப்ப நிலையை சோதிக்க வேண்டும்**
**மீன் பிடித்தொழிலுக்கு செல்லும் அனைவருக்கும் தும்மல், இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இல்லாமல் ஆரோக்கியமாக உள்ளனர் என்பதனை உறுதி செய்ய வேண்டும்**

**விழித்திருங்கள்** | **பாதுகாப்பாக மீன் பிடியுங்கள்**

**ICAR- மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம் , கொச்சி, இந்தியா**

# கோவிட்-19 மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குத் தளங்களில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான ஆலோசனைகள்

**கோவிட்- 19 சுவாச நீர்த்துளிகள் மூலம் பரவுகிறது**



நோயுற்ற நபர் இருமும் போதும், தும்மும் போதும் அல்லது சுவாசத்தை வெளியேற்றும் போதும் வைரஸ் நிறைந்த சுவாச நீர்த்துளிகளை வெளியேற்றுகிறார்.

61-71% ஆல்கஹால் அல்லது 0.5% ஹைட்ரஜன் பெராக்ஸைடு அல்லது 0.1% சோடியம் ஹைப்போ குளோரைட் கொண்டு மேற்பரப்புகளை கிருமிநீக்கம் செய்வதன் மூலம் கொரோனா வைரஸை செயலிழக்கச் செய்ய முடியும்.

**தொடுகையில்லா பரிசோதனை செய்யவும்**

துறைமுக நுழைவாயிலில் அனைவரின் உடல் வெப்ப நிலையைப் பரிசோதிக்கவும்



**கையுறை மற்றும் முகக்கவசம் பயன்படுத்தி சுகாதாரத்தை பேணிக் காக்கவும்**

கைகளை சோப்பு அல்லது ஆல்கஹால் கலந்த கிருமிநாசினி கொண்டு கழுவவும்



**சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்**

மீன் விற்பவர் மற்றும் வாங்குபவர் இடையே ஒரு மீட்டர் இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்




**உள்ளே நுழையும் வாகனங்களை கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யவும்**



**துறைமுகப் பகுதியை அடிக்கடி கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யவும்**




**கூட்டம் சேர்வதைத் தவிர்க்கவும்**

அந்நிய நபர்கள் நுழைவதைக் கட்டுப்படுத்தவும்



**பொது இடங்கள், மீன்கள் மற்றும் பனிக்கட்டிகளின் மீது எச்சில் துப்புவதைத் தவிர்க்கவும்**




ICAR - மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம், கொச்சி, இந்தியா

# மீன்பதனத் தொழிற்சாலைகளில் கொரோனா வைரசைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்




தொழிலாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும். வேலை நேரத்தைக் குறைக்கவும்.



தொழிற்சாலைக்குள் வரும் அனைத்து வாகனங்களும் சரியான முறையில் சுத்தம் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்



மீன்களை கையாளப் பயன்படும் மேசைகள் மற்றும் தொழிற்சாலையின் தரைத்தளங்களை அடிக்கடி கிருமி நீக்கம் செய்யவும்



தொழிலாளர்களுக்கு காய்ச்சல், சளி, இருமல் போன்ற அறிகுறிகள் உள்ளதா என்பதனைச் சோதிக்கவும்






சமூக இடைவெளி மற்றும் தனி நபர் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்கவும்

**தனித்திருங்கள் விழித்திருங்கள் சமூக அக்கறையுடன் இருங்கள்**

**வரும் முன் காப்போம்**

**ICAR - மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம்**
**கொச்சி, கேரளா - 682029**

# கோவிட்-19: மீன் பிடித்தல் மற்றும் மீன்களைக் கையாளும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்



மீன் பிடித்தலுக்கு முன்பும், பின்பும், குறைந்தபட்சம் 20 வினாடிகள் சோப்பு அல்லது ஆல்கஹால் உள்ள கிருமிநாசினியைக் கொண்டு கைகளை நன்றாகக் கழுவவும்



தேவையான, நன்கு அறிமுகமான மற்றும் அதே படகில் பணிபுரியும் மீனவர்களை மட்டும் மீன்பிடித் தொழிலில் அனுமதிக்கவும். முன்பின் தெரியாத நபர்களை அனுமதிக்க வேண்டாம்



வெளிநாடு / வெளி மாநிலப் பயணம் மேற்கொண்டவர்கள், இருமல், சளி மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் மீன்பிடிக்கச் செல்வதைத் தவிர்க்கவும்




இருமல் மற்றும் தும்மலின் போது கைகளைத் தவிர்த்து, முழங்கையினை உபயோகப்படுத்தவும். இருமல் மற்றும் தும்மலுக்குப் பிறகு சோப்பு அல்லது கிருமிநாசினி கொண்டு கைகளை நன்றாகக் கழுவவும்



கண்கள், மூக்கு மற்றும் வாயினை கைகளால் தொடுவதைத் தவிர்க்கவும்




மீன் விற்பகம் / சந்தை போன்ற இடங்களில் கூட்டம் சேர்வதைத் தவிர்த்து சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்.



கடற்கரையில் மீன்கள் மற்றும் ஐஸ்கட்டிகளைத் திறந்தவெளியில் வைப்பதைத் தவிர்க்கவும்



மீன்களைக் கையாளும் போது (ஏற்றுதல், இறக்குதல், குளிர் பதனப் படுத்துதல் மற்றும் பெட்டிகளில் அடைத்தல்) சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும். மீன்களைக் கையாளும் உபகரணங்களைப் பயன்படுத்தவும்



கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யப்பட்ட உபகரணங்கள், கலன்கள் மற்றும் குளிர்காப்புப் பெட்டிகளைப் பயன்படுத்தவும்



ஒவ்வொரு விற்பனைக்கு முன்பும் பின்பும் கைகளைக் கிருமிநாசினி கொண்டு தூய்மையாக்கவும். மீன் விற்பகப் பணியாளர்கள் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்



ஒவ்வொரு முறையும் மீன் பிடிப்புக்குச் சென்று வந்த பிறகு, படகு மற்றும் மீன்பிடி உபகரணங்களை சோப்பு அல்லது கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்தவும்



தனிநபர் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்

ICAR - மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம்
கொச்சி, கேரளா 682029